# ஏக்கருக்க ரூ.4 லட்சம்.. நெகிழ வைக்கும் நேரடி விற்பனை முத்தான வருமானம தரும் முல்லை !

## 10.12.2013



முல்லைப்பூ தோட்டத்தில் மகாலிங்கம் தம்பதி...

தான் வாடினாலும்.. எப்போதும் தன்னை சாகுபடி செய்யும் விவசாயிகளை வாட வைப்பதில்லை மலர்கள்… அனுபவ விவசாயி ஒருவர் சொன்ன வாசகம் இது. அது எந்த விதத்திலும் பொய்யில்லை என்கிறார், வேலூர் மாவட்டம் ரஸ்லாபாக்கம், மகாலிங்கம் ! இவர், காட்பாடியிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும் லத்தேரி கிராமத்தில் மலர் சாகுபடி செய்து வருகிறார். பூ விற்பனையையும் நேரடியாக மேற்கொண்டு, அப்பகுதி விவசாயிகளுக்கு முன்னோடியாகவும் இருக்கிறார்.

### கரும்பிலிருந்து காய்கறி!

கரும்பு, நெல், வாழை என்று அப்பா சாகுபடி செய்வார். அதில் கணக்கு பார்த்தால்…வரவுக்கும், செலவுக்கும் பெரும்பாலும் சரியாக போய்விடும். நான் விவசாயத்தில் இறங்கியதும், வழக்கமான பயிர்களை விட்டுவிட்டு. கத்திரி, வெண்டை, முள்ளங்கி என்று காய்கறிகளை சாகுபடி செய்ய ஆரம்பித்தேன். அதிலும் சொல்லிக் கொள்ளும்படி வருமானம் இல்லை. அதனால், வருமானம் அதிகம் கிடைக்கும் பயிர்களைத் தேட ஆரம்பித்தேன். அது 1979 –ம் வருடம். அப்போது, என்னை மாதிரியே தேடலிலிருந்த சிலருடைய தொடர்பு கிடைத்தது. நாங்க பத்து பேர் ஒன்றாக சேர்ந்து, தமிழ்நாடு முழுக்க சுற்றி, பல விவசாயிகளிடம் பேசினோம். எங்க பகுதி மண், சீதோஷ்ணம், கிடைக்கும் தண்ணீர் அளவு எல்லாவற்றையும் விசாரித்து தெரிந்துகொண்டு … மா, கொய்யா, சப்போட்டா மாதிரியான பழ மரங்களையும், முல்லைப் பூவையும் செய்தால் லாபகரமாக இருக்கும் என்று நிறைய விவசாயிகள் அறிவுரை சொன்னார்கள் என்றார் மகாலிங்கம்.

### கை கொடுத்த முல்லை !

நாங்க அனைவரும் கொய்யா, எலுமிச்சை, முல்லை மூன்றையும் சாகுபடி செய்ய ஆரம்பித்தோம். ஆனால், வறட்சிக்கு கொய்யா தாக்கு பிடிக்கவில்லை. அதனால், மூன்றாம் வருடமே கொய்யா மரங்களை வெட்டிவிட்டேன். எலுமிச்சை நன்றாக வந்தாலும், இங்கு சரியாக விற்பனை செய்ய முடியாததால், ஏழு வருடம் கழித்து அதையும் கழித்துவிட்டேன். ஆனால், ஒன்றரை ஏக்கரில் இருந்த முலலைப் பூ கை விடவில்லை. நல்ல வருமானம் கொடுத்தது. அதனால், இந்தப் பகுதிக்கு இதுதான் ஏற்றது என்று மற்ற

விவசாயிகளிடம் எடுத்துச் சொல்லி அவர்களுக்கும் நானே நாத்து உற்பத்தி செய்து கொடுத்து கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கரில் முல்லை பூவை சாகுபடி செய்ய வைத்தேன். இப்போது, 6 ஏக்கர் சொந்த நிலம், 10 ஏக்கர் குத்தகை நிலம் என்று... மொத்தம் 16 ஏக்கரில் விவசாயம் செய்கிறேன். 70 சென்டில் மஞ்சள், நான்கரை ஏக்கரில் மல்பெரி, இரண்டரை ஏக்கரில் சப்போட்டா, ஒரு ஏக்கரில் தீவனச் சோளம், 70 சென்டில் பட்டன் ரோஸ், ஒன்றரை ஏக்கரில் சம்பங்கி, நான்கு ஏக்கரில் முல்லை இருக்கிறது. மீதி இடத்தில் பட்டுப்புழுவிற்கான கொட்டகை, ஆட்டுக்கொட்டகை எல்லாம் இருக்கு என்றார்.

### வழிகாட்டிய பேராசிரியர் !

2000 ம் வருடத்திற்கு முன்புவரைக்கும் ரசாயன விவசாயம்தான். ஒரு முறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பாஸ்கரை சந்தித்தேன். அப்போது, ரசாயனம், பூச்சிக் கொல்லிகளால் மண்வளம் கெட்டுப் போய்விடும் என்று சொன்னவர் இயற்கை விவசாயம் பற்றியும் எடுத்துச் சொன்னார். அதன்பிறகுதான், ரசாயனத்தைக் குறைத்துக் கொண்டு கோழி எரு, உயிர் உரங்கள் என்று மாறினேன். இப்போது எங்க வீட்டில் அரிசி இருக்கோ இல்லையோ... தோட்டத்தில் பஞ்சகவ்யா கரைசல் எப்பவுமே இருக்கும். இப்போது, கிட்டத்தட்ட 80 சதவிகிதம் இயற்கை விவசாயம்தான். கொஞ்சமாகதான் ரசாயன உரம், பூச்சிக்கொல்லி பயன்படுத்துகிறேன் என்றார்.

### ஏக்கருக்கு 3,000 செடிகள் !

'முல்லை, கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் வரை மகசூல் கொடுக்கும். செம்மண், களிமண், கரிசல்மண் ஆகியவை ஏற்றவை. ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை நடவுக்கு ஏற்ற மாதங்கள். தேர்வு செய்த நிலத்தை களைகள் இல்லாத அளவுக்கு நன்கு உழுது.. இறுதியாக, ஏக்கருக்கு 15 டன் தொழுவுரம், 250 கிலோ ஜிப்சம், 250 கிலோ சூப்பர் பாஸ்பேட் என்ற கணக்கில் கொட்டி உழவு செய்ய வேண்டும். பிறகு, ஒரு வரிசை, அடுத்து 6 அடி இடைவெளியில் ஒரு வரிசை, அடுத்து 3 அடி இடைவெளியில் ஒரு வரிசை, அடுத்து 6 அடி இடைவெளியில் ஒரு வரிசை, அடுத்து 3 அடி இடைவெளியில் ஒரு வரிசை இருப்பது போல் மாற்றி மாற்றி அளந்து .. ஒவ்வொரு வரிசையிலும் குழிக்குக் குழி 3 அடி இடைவெளி இருக்குமாறு. ஒரு கன அடி அளவுக்கு குழிகள் எடுக்க வேண்டும். (ஏக்கருக்கு 3 ஆயிரம் குழிகள் எடுக்கலாம்) இதற்கு 'இணை நடவு முறை' என்று பெயர். குழியை ஒரு வாரம் ஆறப்போட்டு, 10 லிட்டர் தண்ணீரில், 300 மில்லி பஞ்சகவ்யா கலந்து.. 8 மாத வயது கொண்ட முல்லைப் பதியன்களை, அக்கரைசலில் நனைத்து, குழியில் நடவு செய்ய வேண்டும். முதல் ஆண்டில் 500 கிலோ மகசூல் ! மூன்றாம் நாள் உயிர் தண்ணீர் கொடுக்க வேண்டும். 7 ம் நாளில் புதுத்துளிர்விட்டு வளர ஆரம்பிக்கும். பிறகு, வாரம் ஒரு முறை தண்ணீர் கட்டினால், போதுமானது. 20-ம் நாளுக்கு பிறகு, 6 மாதங்களுக்கு பவர் வீடர் மூலமாகக் களைகளை அகற்ற வேண்டும். 60-ம் நாளில் ஒவ்வொரு செடிக்கும் 5 கிலோ கோழி எரு வைத்து, கொத்திவிட வேண்டும். 20-ம் நாளிலிருந்து, தொடர்ச்சியாக, 20 நாட்களுக்கு ஒரு முறை டேங்குக்கு (10 லிட்டர்) 300 மில்லி பஞ்சகவ்யா, தலா 10 மில்லி வீதம் சூடோமோனஸ், டிரைக்கோடெர்மா விரிடி, வேம் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து தெளிக்க வேண்டும். ஏக்கருக்கு 10 டேங்குகள் தேவைப்படும். முதல் ஆண்டில், பூச்சித்தாக்குதல் பெரிய அளவில் இருக்காது. அதனால் பூச்சிக்கொல்லிகளுக்குத் தேவையிருக்காது. 5-ம் மாதத்திற்குப் பிறகு, மொட்டு அரும்பி மகசூலுக்குத் தயாராகும். ஒரு ஏக்கரிலிருந்து, தினம் இரண்டு கிலோ முதல் மூன்று கிலோ வரை பூ

எடுக்கலாம். முதல் ஆண்டு என்பதால், 450 கிலோ மகசூல் கிடைக்கும். அடுத்தடுத்த ஆண்டுகளில் மகசூல் கூடும். கவாத்து.. கவனம்! வழக்கமாக. டிசம்பர் மாதத்தில் மகசூல் முடிவடையும். ஜனவரி மாதத்தில் பலரும் கவாத்து செய்து விடுவார்கள். ஆனால், அப்படிச் செய்யாமல்... ஒரு மாதம் விட்டு பிப்ரவரி மாதத்தில் கவாத்து செய்தால், மகசூல் கூடுகிறது. முதல் ஆண்டு கவாத்தின் போது, மண்ணுக்கு மேல் செடிகள் அரையடி உயரம் இருக்குமாறு விட்டு, மேல் பகுதியை வெட்டிவிட வேண்டும். இரண்டாவது ஆண்டு கவாத்து செய்யும் போது ஒரு அடி உயரம் விட்டு வெட்ட வேண்டும. அதையடுத்து வரும் ஆண்டுகளில் கவாத்து செய்யும் போது, ஓர் அடி ஓர் அங்குலம், ஓர் அடி இரண்டு அங்குலம் என்று ஒவ்வொரு அங்குலமாகத்தான் கூட்டிக் கொண்டே வர வேண்டும். கவாத்து செய்த செடிகளில் 'பென்சில்' தடிமனுக்குக் குறைவாக உள்ள கிளைகள், பச்சைத்தண்டு உள்ள பாகங்கள் அனைத்தையும் நீக்க வேண்டும். தொடர்ந்து டேங்குக்கு 300 மில்லி பஞ்சகவ்யா, தலா 10 மில்லி சூடோமோனஸ், டிரைக்கோடெர்மா விரிடி, வேம், 20 மில்லி வேப்பண்ணெய், 10 மில்லி இயற்கை ஒட்டுதிரவம் ஆகியவற்றைக் கலந்து தெளிக்க வேண்டும். முதல் இரண்டு மாதங்களுக்கு 10 நாட்கள் இடைவெளியிலும், அதன் பிறகு 20 நாட்கள் இடைவெளியிலும் இக்கலவையைத் தொடர்ந்து தெளித்து வர வேண்டும். கவாத்து செய்த 20-ம் நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை 250 லிட்டர் தண்ணீரில், 5 கிலோ கடல்பாசி உரம், 10 லிட்டர் பஞ்சகவ்யா, தலா ஒரு கிலோ டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ், வேம் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து செடிகளின் வேர்ப்பகுதியில் ஊற்றிவிட வேண்டும். கவாத்து செய்த 45-ம் நாளில் இருந்து, பூவெடுக்க ஆரம்பிக்கும். 45, 105, 165-ம் நாட்களில் பரிந்துரைக்கப்படும் ரசாயன உரங்களை இட வேண்டும். ஒவ்வொரு மார்ச் மாதம் மற்றும் ஆகஸ்ட் மாதம் என ஆண்டுக்கு இரண்டு முறை 10 டன் கோழி எரு, 500 கிலோ வேப்பம் பிண்ணாக்கு ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து நிலத்தில் இறைத்து, களைகளைக் கொத்திவிட வேண்டும். நூற்புழு, செம்பேன் ஆகியவை தாக்கினால், பரிந்துரைக்கப்படும் பூச்சிக் கொல்லிகளைத் தெளிக்கலாம். ஏப்ரல் மாதம் தொடங்கி, டிசம்பர் வரைக்கும் பூ எடுக்கலாம். இரண்டாம் வருடத்திலிருந்து முழு மகசூல் கிடைக்க ஆரம்பித்துவிடும். ஒரு ஏக்கரில் தினமும் 20 கிலோவிலிருந்து 25 கிலோ வரை பூ கிடைக்கும். சராசரியாக ஒரு செடியிலிருந்து சராசரியாக 6 டன் பூ கிடைக்கும். ஒரு கிலோ முல்லைப் பூ 70 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரை விற்பனையாகிறது. சராசரியாக கிலோவுக்கு 100 ரூபாய் என்று வைத்துக் கொண்டால்... 6 டன்னுக்கும் வருடத்திற்கு 6 லட்ச ரூபாய் கிடைக்கும். எல்லா செலவும் போக, 4 லட்ச ரூபாய்க்குக் குறையாமல் லாபம் என்றார். நாம் நேரடியாக விற்பனையில் இறங்கினால் ... கூடுதல் லாபம் ! முல்லைப் பூ சாகுபடி செய்வதோடு, சொந்தமாக கமிஷன் கடையும் நடத்தி வருகிறார் மகாலிங்கம். " முல்லைப்பூவை, விற்பனை செய்ய வேலூர் கொண்டு போகும் போது...வியாபாரிகள் எல்லாம் சிண்டிகேட் போட்டுக்கிட்டு விலையைக் குறைத்து ஏமாத்தினார்கள். நாங்க, கண்டுபிடித்து சண்டை போட்டப்போது... கொஞ்ச நாள் ஒழுங்காக பணம் கொடுத்தாங்க. திரும்பவும் ஏமாற்ற ஆரம்பித்தார்கள். 'பூ சாகுபடி பற்றி எதுவுமே தெரியாத வியாபாரிகள், கொள்ளை லாபம் பார்க்கிறார்கள். கஷ்டப்பட்டு உற்பத்தி செய்யும் நாம் நஷ்டப்படுவதா? என்று நாங்களே வியபாரியாக மாற முடிவு செய்து.. 'வட ஆற்காடு மாவட்ட மலர் உற்பத்தியாளர் கூட்டமைப்பு' உருவாக்கினோம் (தற்போது, வடஆற்காடு மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு வேலூர், திருவண்ணாமலை என செயல்பட்டு வருகிறது). நாங்க பூ விற்பதற்கு வேலூரில் கடை வாடகைக்கு கேட்டப் போது, மற்ற வியாபாரிகள் தலையிட்டு தடங்கல் செய்தார்கள். கலெக்டரைப் பார்த்து பேசி, கடையைப் பிடித்தோம். அதனால், எங்களுக்கு நல்ல லாபம் கிடைக்க ஆரம்பித்தது. அதன் பிறகு நாம் பூ விற்பதற்காக எதுக்கு இவ்வளவு தூரம் அலைய வேண்டும் என்று யோசித்து 'அவங்கவங்க உற்பத்தி செய்யும் ஊரிலேயே விற்ப்போம் என்று முடிவு செய்தோம். நான், லத்தேரியிலேயே கடை

ஆரம்பித்தேன். என் தோட்டத்துப் பூ மட்டுமில்லாமல், மற்றவர்களிடமும் கொள்முதல் செய்து, திருப்பதி, பெங்களூர், சென்னை, கல்லூர், புத்தூர் என்று பல ஊர்களுக்கு அனுப்பிட்டிருக்கிறேன். இப்போது இங்கு மட்டும் 16 கமிஷன் கடைகள் இருக்கு. அந்த அளவிற்கு முல்லைப் பூ சாகுபடி இந்தப் பகுதியில் பெருகி இருக்கு என்றார். வேப்பங்கொட்டை + பூண்டுக் கரைசல் ! வேப்பங்கொட்டை – 5 கிலோ, காரமான வெள்ளைப் பூண்டு – அரை கிலோ இரண்டையும் ஆட்டு உரலில் இட்டு இடித்து ( எக்காரணம் கொண்டும் கிரைண்டரிலோ, மிக்ஸியிலோ அரைக்கக் கூடாது.) காட்டன் துணியில் இறுக்கமாகக் கட்டி, 10 லிட்டர் மாட்டுச் சிறுநீரில் 24 மணி நேரம் ஊற வைத்தால், கரைசல் தயார். இதனுடன் 100 கிராம் காதி சோப்பைக் கரைத்து, பத்து லிட்டர் டேங்குக்கு 500 மில்லி என்கிற விகிதத்தில் கலந்து, மாலை மூன்று மணிக்குப் பிறகு தெளிக்க வேண்டும். பச்சை மிளகாய் + பூண்டுக் கரைசல் ! காம்பு நீக்கம் செய்யப்பட்ட 3 கிலோ பச்சை மிளகாயை அரைத்து, 3 லிட்டர் தண்ணீரில் இட்டு 24 மணி நேரம் வைக்க வேண்டும். கால் கிலோ வெள்ளைப் பூண்டை இடித்து, 100 மில்லி மண்ணெண்ணெயில் இட்டு, 24 மணி நேரம் வைக்க வேண்டும். பிறகு, இரண்டு கரைசலையும் ஒன்றாகக் கலந்து, 10 லிட்டர் அளவுக்கு வரும் வரை தண்ணீர் சேர்த்து, 100 கிராம் காதி சோப்பைக் கரைத்துவிட வேண்டும். இதை, பத்து லிட்டர் டேங்குக்கு 500 மில்லி என்ற விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும்.

---

தொடர்புக்கு:

**மகாலிங்கம், செல்போன் :94434 87770**

***ஆதாரம் : பசுமை விகடன் வெளியீடு 10.12.2013 www.vikatan.com***